
# இஷ்ட தெய்வ பக்திப் பாடல்கள்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை தட்டாதெருவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர் தங்கராசா நிரஞ்சன் அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

## நினைவு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15-10-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை தட்டாதெருவை வதிவிடமாகக் கொண்ட

# அமரர் தங்கராசா நிரஞ்சன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு வெளியீடு

**15-10-2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமர்ப்பணம்

குன்றிலிட்ட தீபமாய்
நேர்மையின் சிகரமாய்
நேசத்தின் வடிவமாய்
மாந்தருள் மாணிக்கமாய்
அன்புக்கு இலக்கணமாய்
எம் இதய ஜோதியாய் வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் செல்வத்தின் பாதார
விந்தங்களுக்கு இம்மலரைக்
காணிக்கையாக்குகின்றோம்.

| அப்பா | அம்மா | அண்ணா |
|---|---|---|
| **ச. தங்கராசா** | **த.ஜெகசோதி** | **த. நிருபன்** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம



அன்னை மடியில்
12.09.1988

ஐயப்பன் அணைப்பில்
16.04.2011

அமரர்

# தங்கராசா நிரஞ்சன்

(கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ பீட
முதலாமாண்டு மாணவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

கஜானனம் பூதகனாதி சேவிதம்
கபித்த ஜம்பூப் பலசார பாணிஷிதம்
உமாசுதம் சோக விநாக காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கலந்து.

அரியதோர் நமச்சிவாய மாதியந்த மானதும்
ஆறிரண்டு நூறுதவ ரன்றுரைத்த மந்திரம்
சுரியதொ ரெழுத்தை யுன்னிச் சொல்லுவேன் சிவவாக்கியம்
தோஷதேஷ பாவமாயை தூரதூர ஓடவே
கரியதோர் முகத்தையுற்ற கற்பகத்தைக் கைதொழக்
கலைக்ள நூல்கள் ஞானமும் கருத்தில் வந்துதிக்கவே
பெரியபேர்கள் சிறியபேர்கள் கற்றுணர்ந்த பேரெலாம்
பேயனாகி ஓதிடும் பிழைபொறுக்க வேண்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனி னிப்பிறவாத
தன்மை வந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிப் பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான் மறக்கினுஞ்
சொல்லு நா நமச்சி வாயவே.

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்க் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாதருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டெனில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

அலந்து போயினேன் அம்பலக் கூத்தனே!
அணிதில்லை நகராளி
சிலந்தியை அரசாள வைத்த
தேவ தேவீசனே
உலந்த மார்க்கண்டிக்காகி
அக்காலனை உயிர் செக உதைத்த
மலர்ந்த பொற்பாதங்கள் வனமுலை
மேலொற்ற வந்தருள் செய்யாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் அம்பலத்துள்ளே புகுந்து
புவனி யெலாம் விளங்க
அன்ன நடை மடவாளுமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புராணம்

பரமனை மதித்திடாப் பங்கய ஆசனன்
ஒருதலை கிள்ளியே ஒளிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவருள்
முப்பத்துமு வர்க்குத் தாமரரு மடிபேணப்
பத்துத்தலை தக்கக் கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி வி வாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத்தொடு ரட்ஷித் தருள்வது மொருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிமிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
சித்தரப் பவுரிக்குத் திரிகடக எனவோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றொழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்தப் பொரவல பெருமாளே.

## கந்தரனுபூதி

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த் தெனையாள்
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமார மறை நாயகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

## அம்பிகையின் திருவுருவை மனத்தில் எப்போதும் காண

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கை வல்லி
கழையைப் பொருத திருநெடுங் தோளும், கரும்பு வில்லும்
விழையப் பொருதிறல் வேரிஅம் பாணமும், வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே!

*திருச்சிற்றம்பலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜனைப் பாடல்கள்

## கணபதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

ஓம் காரம் ஜெய ஓம் காரம்
உலகம் அனைத்தும் ஓம் காரம் *(ஓம்காரம்)*

ஒளியின் விளக்கம் ஓம் காரம்
ஒளியின் முழக்கம் ஓம் காரம்
மொழியின் அடிப்படை ஓம் காரம்
முடிவும் நடுவும் ஓம்காரம் *(ஓம்காரம்)*

2) விண்ணின் விரிவே ஓம்காரம்
வேதச்சிகரம் ஓம் காரம்
எண்ணும் எழுத்தும் ஓம்காரம்
இசைப்பது அனைத்தும் ஓம்காரம் *(ஓம்காரம்)*

3) அனுவின் மலர்ச்சி ஓங்காரம்
அன்புச் சுழற்சி ஓங்காரம்
மணியின் நாதம் ஓங்காரம்
மலரும் கீதம் ஓங்காரம் *(ஓம்காரம்)*

4) இடியின் முழக்கம் ஓம் காரம்
எழிலி மழைமொழி ஓங்காரம்
கடலின் குமுறல் ஓங்காரம்
காற்றின் விரைவொளி ஓங்காரம் *(ஓம்காரம்)*

5) அருவத் திருவொளி ஓம் காரம்
அருநந்தி நடையொழி ஓம் காரம்
கடலின் குரலொலி ஓம் காரம்
காற்றின் விரைவொலி ஓம் காரம் *(ஓம்காரம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) குரலொலி யாழொலி ஓம் காரம்
கொழுந்தீச் சுடரொலி ஓம் காரம்
மழலையின் நகையொலி ஓம்காரம்
மதுரப் பன்னொலி ஓம் காரம் *(ஓம்காரம்)*

7) எல்லாம் கடந்தது ஓம்காரம்
எதிலும் உள்ளது ஓம்காரம்
வல்லார் ஜெயிப்பது ஓம்காரம்
மனதில் இனிப்பது ஓம்காரம் *(ஓம்காரம்)*

8) என்றும் பரம்பொருள் ஓம்காரம்
உள்ளது அனைத்தும் ஓம்காரம்
என்றும் நிலைப்பது ஓம்காரம்
இதயம் ஒலிப்பது ஓம்காரம் *(ஓம்காரம் ஜெய ஓம்காரம்)*

## பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் அருளைக்கொடுக்கும் பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
அமர்ந்திருக்கும் பிள்ளையார் அருமையான பிள்ளையார் *(பிள்ளையார்)*

அவல்பொரி கடலையும் அரிசிக் கொழுக்கட்டையும்
அன்புடனே ஏற்றுக்கொள்ளும் பெருமைவாய்ந்த பிள்ளையார்
வேலவனின் அண்ணனாம் வேள்விக் கெல்லாம் முதல்வனாம்
பார்வதியின் மைந்தனாம் பார்புகழும் பிள்ளையார் *(பிள்ளையார்)*

மஞ்சளாலும் செய்யலாம் மண்ணினாலும் செய்யலாம்
அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
சங்கரனின் புதல்வனாம் சாஸ்திரத்தின் முதல்வனாம்
சகலத்திற்கும் மூலனாம் சக்தி வாய்ந்த பிள்ளையார் *(பிள்ளையார்)*

வன்னி மரத்து நிழலிலே வரங்கள் தரும் பிள்ளையார்
வில்வமரத்து நிழலிலே வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
நெல்லி மரத்து நிழலிலே வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
பக்தி தரும் பிள்ளையார் முக்தி தரும் பிள்ளையார் *(பிள்ளையார்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூஷிக வாகன மோதக கஸ்தா
ஓம் கணநாதா ஓம்
ஸ்யாமள கர்ண விளம்பித புத்ரா
ஓம் கணநாதா ஓம்
வாமன ரூப மகேஸ்வர புத்ரா
ஓம் கணநாதா ஓம்
விக்ன விநாயக பாத நமஸ்தே
ஓம் கணநாதா ஓம்
ஓம் கணநாதா ஓம்

## ஐங்கரக் கணபதி

ஐங்கரக் கணபதி ஆனந்தக் கணபதி
மங்களக் கணபதி மந்திரக் கணபதி

இன்பம் தருவான் எம்முன் வருவான்
துன்பம் துடைப்பான் துணையாய் இருப்பான்

மூலாதாரன் மும்மதக் களிறு
நூலாதாரன் நுண்கலை யருள்வான்

போற்றிடு மடியாய் புந்தியி லுறைவான்
சாற்றிடும் ஞானத் தனிமழை சொரிவான்

அன்புப் பிடியில் அகப்படும் பெருமான்
ஒன்பது கோளும் கொருபெருந் தலைவன்

பொன்னியை மண்ணிற் பொலிந்திடச் செய்தான்
மன்னிய திருமுறை வழங்கிய வைத்தான்

தமிழ்க்கவிப் பிரியன் தத்துவப் பெரியன்
நமபயம் நீக்கும் நாற்கதித் தலைவன் *(ஐங்கரக் கணபதி)*

## ஓம் நமச்சிவாயம்

ஓம் நமச்சிவாயம் ஓம் நமச் சிவாயம்
உலகங்கள் எல்லாம் ஓம் நமச் சிவாயம்
ஓம் நமச்சிவாயம் ஓம் நமச் சிவாயம்
உள்ளத்தி லிருப்பான் ஓம் நமச் சிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கர சிவசிவ ஓம் நமச் சிவாயம்
சாம்பசதாசிவ ஓம் நமச் சிவாயம்
லிங்க சொரூபா ஓம் நமச் சிவாயம்
ஏகாம் பரனே ஓம் நமச் சிவாயம்

உமை யொருபாகா ஓம் நமச் சிவாயம்
ஒருபத மெடுத்தாய் ஓம் நமச் சிவாயம்
நமசிவயப் பொருள் ஓம் நமச் சிவாயம்
நான் மறை நாயக ஓம் நமச் சிவாயம்

அண்டருக் கரியாய் ஓம் நமச் சிவாயம்
அடியவர்க் கெளியாய் ஓம் நமச் சிவாயம்
தொண்டரைக் காக்கும் ஓம் நமச் சிவாயம்
துணையடி தருவாய் ஓம் நமச் சிவாயம் *(ஓம் நமச் சிவாயம்)*

அம்பலத் தரசே அருமருந்தே
ஆனந்தத் தேனே அருள் விருந்தே
பொது நடத்தரசே புண்ணியனே
புலவரெல்லாம் புகழ் கண்ணியனே
சிவசிவ சிவசிவ சின்மய நேஜா
சிவசுந்தர குஞ்சித நடராஜா
மலைதரு மகனே மடமயிலே
மதிமுக அமுதே இளங்குயிலே

ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே
படன விவே பரம்பர வேதா
நடன சபேச சிதம்பரநாதா
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரஹர சிவசிவ ஆடிய பாதா
தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா
கருணா நிதியே சபாபதியே
பதிமா நிதியே பசுபதியே
சங்கர சிவசிவ மகாதேவா
எங்களை யாட்கொள வாவாவா
அர ஹர சிவசிவ மகாதேவா
அருளமுதந்தர வா வா வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா
சிவராஜா சிவராஜா சிவகாமிப்ரிய சிவராஜா
பரமேசா பரமேசா பார்வதி நாயக பரமேசா
கங்கேச கங்கேச கிரிஜா ரமண கங்கேசா

## ஓம் சக்தி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓங்கார ஆதிசக்தி
ஜெயசக்தி ஜெயசக்தி ஜெயசக்தி ஜெயசக்தி ஜெகமாளும் ஆதிசக்தி

ஈசனுடன் பாதிஎன வேலவனின் அன்னை என
நலம் காக்கும் நீ ஈஸ்வரி
பூவுலகில் சக்தியென நான் வாணங்கும் தேவி என
வருவாயே புவனேஸ்வரி
பம்பைஒலி ஒடுக்கை ஒலிபாதமதில் சலங்கை ஒலி
பாடவரும் பரமேஸ்வரி
ஜெகஜெகன ஜெகஜெகன ஜெகஜெகன என்றபடி
ஜெயமாளும் ஜெகதீஸ்வரி *(ஓம் சக்தி)*

மாகாளி மகமாயி அருள்மாரி தரும்மாரி
சிவரூபி சிவாகமியே
மதிசூலி திரிசூலி மாங்காட்டில் கருமாரி
ஜெயதேவி அபிராமியே
பாம்பாகி வேம்பாகி படர்கின்ற கொடியாகி
வருவாயே தேவ தேவி
பயிர்வாழ மழையாகி உயிர்வாழ உயிராகி
அருள்வாயே சக்தி தேவி *(ஓம் சக்தி)*

திரி சூலம் ஏற்றி அலங்காரத் திருத்தேரில்
ஊர் கோலக் காட்சி கண்டேன்
சிம்மமதன் மேலேறி அசுரர்களை சம்ஹாரம்
செய்கின்ற காட்சி கண்டேன்
அலங்காரச் சிலையாக இருந்தா லே பயனென்ன
உன் சக்தி தனைக் காட்டடி
வாழ்விற்கு பொருளென்ன கேள்விக்குப் பதிலென்ன
வந்திங்கு நீ சொல்லடி *(ஓம் சக்தி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் ஆட்சி செய்கின்ற மீனாட்சி நீ என்னை
ஏனாட்சி செய்யவில்லை
என்மூச்சு என்பேச்சு நீயாகி நின்றாலும்
கண்காட்சி காட்டவில்லை
பொய்யாட்சி புகழாட்சி மண்ணொடு சதியாட்சி
அரசாட்சி செய்யுதம்மா
காமாட்சி உனதாட்சி உலகேழும் பொன்னாட்சி
மெய்யாட்சி வேண்டு மம்மா. *(ஓம் சக்தி)*

வான் மேகம் போலெந்தன் சோகங்கள் நெஞ்சோடு ஆனந்தம் போனதம்மா
தண்ணீரில் மானாகி தரைமீதில் மீனாகி ஆதங்கம் சூழ்ந்ததம்மா
தாயென்று நான் சொல்ல சேயென்று எனைஅள்ள நீ இன்று வாராததேன்
தினம் உன்னைத் தொழுதாலும் நிலையின்றித் தவிக்கின்ற எனைக் கண்கள்
– பாராததேன்
*(ஓம் சக்தி)*

ஊரெங்கும் யுத்தங்கள் உடலெங்கும் ரத்தங்கள் ஏனிந்த நிலைவந்தது
சீர்கொண்ட தாய்நாடு போரென்ற புயல்வந்து பேர்கெட்டு ஏன் போனது
பால்கொண்டு அபிஷேகம் புரிந்தோரின் உடலெங்கும் ரத்தத்தில் அபிஷேகமா
மெய்யான அடியாரின் மெய்நோக வைத்தாலே அதுவே உன்பரிகாரமா
*(ஓம் சக்தி)*

கண்கெட்ட பின்னாலே கதிர்வந்து சென்றாலும் நான் கண்டு தொழலாகுமா
நான்மாண்ட பின்னாலே ஊர்வந்து அழுதாலும் சுகம் வந்து தாலாட்டுமா
பொய்யென்று பலர் சொல்ல மெய்யென்று நான்சொன்ன உன் சக்தி பொய்யாகுமா
நீகொண்ட சக்திக்கும் நான் கொண்ட பக்திக்கும் இது என்ன போராட்டமா?
*(ஓம் சக்தி)*

ஒருநாளில் உயிர்வாழும் மறுநாளில் அது மாளும் போனாலும் அது போகட்டும்
மறுஜென்மம் ஆனாலும் மகனாகி உன் கோயில் தனில் வந்து கவி பாடட்டும்
தாயாகி பாலூட்டி சம்பந்தன் பசிதீர்த்தாயே உன் கருணை காட்டு
பழிபாவம் அறியாத பாவிக்கு நீ வந்து ஒளியான பாதை காட்டு
*(ஓம் சக்தி)*

ஓம்கார நாயகியே காமாட்ஷி அம்மா – எங்கள்
உள்ளமெல்லாம் நிறைந்தவளே மாரியம்மா
ஆனைமுகன் ஆறுமுகன் தாயே அம்மா
அன்பே உருவாக வருவாய் அம்மா ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா தாயே காமாட்ஷி அம்மா
அகிலாண்டேஸ்வரி நீயே அம்மா
இம்மா நிலத்தின் சக்தி அம்மா
இன்பத்தின் இருப்பிடம் நீயே அம்மா ஓம்

வண்ணை மாநகரில் உறைவாய் அம்மா
துன்பம் எல்லாம் தீர்ப்பாய் அம்மா
அர்ச்சனை எல்லாம் செய்தேன் அம்மா
அருளைப் பொழிந்து அருள்வாயம்மா ஓம்

ஏழை எழியரைக் காப்பாய் அம்மா
எங்கும் நிறைந்தே இருப்பாய் அம்மா
கூழை விரும்பிக் குடிப்பாய் அம்மா
குற்றங் குறைகளைப் பொறுப்பாயம்மா ஓம்

வீரத்தின் இருப்பிடம் நீயே அம்மா
விடுதலை தருவதும் நீயே அம்மா
பாரம் உனக்கே தந்தேன் அம்மா
பண்ணொடு பாட வைப்பாய் அம்மா ஓம்

செல்வத்தின் இருப்பிடம் நீயே அம்மா
சிறியேன் சிறுபிழை பொறுப்பாய் அம்மா
கல்வியின் இருப்பிடம் நீயே அம்மா
கருணைக் கடலும் நீயே அம்மா ஓம்

ஆதிபரா சக்தி நீயே அம்மா
அற்புதத் தெய்வமும் நீயே அம்மா
சோதியின் சுடரே நீயே அம்மா
சொற்பனங் கூறி வாழ்ந்தாய் அம்மா

நாகபூஷணி தாயே நாகபூஷணி
நாகபூஷணி நயினை நாகபூஷணி

வந்துபாரம்மா தாயே வந்துபாரம்மா
வழியறியாத் திரியுமெம்மை வந்துபாரம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துநடை கொண்டாடி நாகபூஷணி – நீயுன்
சினம் அடக்கிக் குணம் பெருக்காய் நாகபூஷணி – எமக்குப்
பரசுகங்கள் தந்திடுவாய் நாகபூஷணி – நன்றாக
அமர்ந்தருளிக் காட்சிதாராய் நாகபூஷணி
உச்சியில் நீ தாங்குவதோ நாகரத்தினம் – ஆங்கன்
உள்ளுறையும் ஒளிக்கீற்று நாகரத்தினம்
நாகதோஷம் போக்கிடவே நாகபூஷணி – தோன்றி
நயன்பார்வை செய்திடுவாய் நாகபூஷனி – உந்தன்
குளிர் நயனங் காட்டிடுவாய் நாகபூஷணி
நாகபூஷணி நாகபூஷணி நாகபூஷணி நயினா நாகபூஷணி

மதுரையிலே மீனாட்சி அழகோ அழகு காஞ்சியிலே காமாட்சி குங்குமம் அழகு
அங்கயற்கண்ணி அபிராமி அழகின் அழகு அங்காள பரமேஸ்வரி மஞ்சள் அழகு
தில்லையில் சிவகாமி நல்லையில் காந்திமதி
என்ன சொல்லி அழைச்சாலும் எல்லாமும் நீயம்மா *(மதுரை)*

திருவேற் காட்டினிலே திகழும் வீட்டினிலே அருள்தரும் கருமாரி அழகோஅழகு
பெரியபாளையத்தில் வாழும் மாரியம்மா பரவசப் புன்னகையோஅழகோ அழகு
நான்பாடும் தாய்அழகு மலரும் பூஅழகு பெண்ணாரி மாரியம்மா
ஆலயம் தனிஅழகு என்னசொல்லி அழைச்சாலும் எல்லாமும் நீயம்மா
*(மதுரை)*

வடிவுடை நாயகியின் கதிர்விழி மீன்அழகு வைரத்தில்
மூக்குத்தியும் மின்னும் அழகு கொடியிடை அம்மனுக்கு
கோல விழி மானழகு செந்நிற பட்டாடை சரிகையழகு
திருநகர் குப்பாத்தம்மா தலையணி பேரழகு குமரியன்னையவள்
பாதக் கொலுசழகு என்னசொல்லி அழைச்சாலும் எல்லாமும் நீயம்மா
*(மதுரை)*

## அம்மன் பாடல்

ஆதிசக்தி ஆதிசக்தி ஆதிசக்தியே
ஏது சக்தி உன்னையன்றி காவல் சக்தியே

குங்குமத்தில் குடியிருக்கும் குங்கும சக்தி
மஞ்சளிலே நிறைந்திருக்கும் மங்கள சக்தி
வேப்பிலையில் மறைந்திருக்கும் மூலிகை சக்தி
வேண்டுதலைத் தீர்க்க வரும் தாயெனும் சக்தி *(ஆதிசக்தி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றினிலே படமெடுக்கும் பாம்பெனும் சக்தி
பூவுலகை ஆட்சி செய்யும் அம்மனின் சக்தி
சூலத்தினை ஏந்திவரும் வீரத்தின் சக்தி
வேலனுக்கு வேல் கொடுத்த தாயெனும் சக்தி *(ஆதிசக்தி)*

ஆதி அந்தம் இல்லாத ஆதியின் சக்தி
ஆதி சிவன் பாதி என வாழ்ந்திடும் சக்தி
சிங்கத்திலே ஏறிவரும் சிம்மத்தின் சக்தி
சிந்தையிலே நிறைந்திருக்கும் தாயெனும் சக்தி *(ஆதிசக்தி)*

தாலி வரம் தருபவளே தாலியின் சக்தி
காளி என மாறிவரும் உத்தம சக்தி
நாகமென ஆடி வரும் நந்தினி சக்தி
மேகமென மழை பொழியும் தாயெனும் சக்தி *(ஆதிசக்தி)*

ஜய ஜய ஜய சக்தி ஓம் ஸ்ரீ ஜய ஜய ஜய ஜய சக்தி
ஜய ஜய என தினம் பாடிப் பணிந்தோம்
ஜகம் எங்கும் அமைதியைத்தா – ஓம் ஸ்ரீ *(ஜய ஜய)*

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை ஓம் ஸ்ரீ *(ஜய ஜய)*

இரண்டுக்ள போக மூன்றுகள் அகல
ஈஸ்வர பலமருள்வாய் அம்மம்மா
கரம் குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் ஓம் ஸ்ரீ *(ஜய ஜய)*

காசினி யெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் அம்மம்மா
தேசுடன் வாழ காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலம் தான் ஓம் ஸ்ரீ *(ஜய ஜய)*

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞானத்திற் கமைதியைத் தா ஓம் ஸ்ரீ *(ஜய ஜய)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்கை அம்மன்

தேவி துர்க்கையே ஜயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜயதேவி துர்க்கையே *(தேவி துர்க்கையே)*

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுடன் பழுத்த துர்க்கையே *(தேவி துர்க்கையே)*

தருவுமானவள் துர்க்கா குழந்தையுமானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திருசூலியு மானவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே *(தேவி துர்க்கையே)*

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே *(தேவி துர்க்கையே)*

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே *(தேவி துர்க்கையே)*

## லட்சுமி அம்மன்

செல்வமகா லட்சுமியே கண்பாரம்மா
நல்விளக்காய் எங்களைநீ காப்பாயம்மா *(செல்வமகா)*

ஆனந்த வாழ்வுதரும் ஆதிலட்சுமி
ஆருயிரின் பசிதீர்க்கும் தாயை லட்சுமி
மானமுயர் வீரந்தரும் தைர்ய லட்சுமி
வருவருணை மழை பொழியும் கஜஇலட்சுமி *(செல்வமகா)*

மகப்பேறு தந்திடு சந்தான லட்சுமி
வாழ்வெல்லாம் வெற்றிதரும் விஜயலட்சுமி
புகழ் கல்வி தருகின்ற வித்தியாலட்சுமி
புனிதமான நிதிகொடுக்கும் தனலட்சுமி *(செல்வமகா)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையில் சிவம் சுரக்கும் சோதிலட்சுமி
சிகரமலை வீடுதரும் ஞானலட்சுமி
புந்தியிலே நிறைந்திடு சௌபாக்கியலட்சுமி
புனிதமனைச் சிறப்புதவும் வரதலட்சுமி (செல்வமகா)

பொன் செய்யும் மருந்தாக வருவாயம்மா
புண்ணியங்கள் புரியவரம் தருவாயம்மா
என்மனத்தே கற்பகமாய் இருப்பாயம்மா
எழுபிறப்பும் நின்கருணை சுரப்பாயம்மா (செல்வமகா)

## சரஸ்வதி அம்பாள்

1. கன்னித் திங்கள் வருகிற தம்மா
கருத்துடன் நவராத்திரி பூஜை
கலைமகள் அம்மைகள் பூஜைகள் செய்திட
காசும் பணம் வேண்டும் வேண்டும்
பொன்னைப் போல நிறைமுடை கனியும்
பூமடை காமடையும்
புனிதா அஸ்பம் இளநீர்ப் புஸ்பம் புனுகுசவாகுடனே
அன்னைப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகள்
மாதா மனை தோறும்
வாங்கும் பணங்கள் அரிசிகள் கொண்டு வந்திடு பூஜைக்கு
அன்னப் பரிமள குங்கும அமுத
அழகிய சடையாளே
தேவி விரதம் ஒன்பது நாளும்
திரு நவராத்திரியாம்

2. ஓங்கார வடிவான உன்பாத தாமரைகளும்
உபயகரிபுர மறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்கள் ஒருகோடி நிற ஒளியும்
உத்தூள நீக்கி ஒளியும்
பாங்கார யானனவும் உபகரணமும் வழங்கிய
பவளாசனங்கள் நான்கும்
பாசமுடன் அங்குசம் கொம்பேரி நட்டுவம்
வைத்த வொரு வச்ச கரமும்
நீங்காத அருள்மாரிபொளி யென்பகமும்
நிறையும் மிதமாரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சடாகவியும் பெண்பிறவியும் ஒரு தொந்தியும்
நெஞ்சிலொரு காலம் மறவேன்
காங்கேயன் மகளமென கங்கை நதிபெருக
காசிவா யுன்பி ராசா
கணபதியும் உன்பெரிய குணமேத பேரரருள்
கருணாநிதிக் கடவுளே

3. புத்தகத்துள்ளுறை மாதே பூவில வந்திட வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப் பொருளுக்கிறைவீ
முத்தண்ண வெண்குடையாளே மூவேழுலகுந் தொழுதிடுந்தேவி
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப் பொருளுக்கிறை வீ
செப்புத் தரித்திட ஒளியாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
முத்து நிறத்த வென் பல்லாய் முருக்கம்பூ மேனி நிறத்தாளே
தக்கோலம் செஞ்சுடர் வாயாய் சரஸ்வதி என்னும் திருவே
எக்காலமும் உனைத் தொழுவோம் எழுத்தறி வித்து முன் நிற்பாய்
ஆக்காய் எம் பெருமாட்டி அழகிய புவமீதாய்
நோக்காய் எம்பெருமாட்டி நொடிக்கும் பிராமணத்தி நோக்குவாயே
சாலி நெல் அரிசி கொண்டு சரஸ்வதி பூஜை பண்ணி

பாலொடு பழத்தை நிரப்பி பலாவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமஸ் தே ஞானக் கொழுந்தே நமஸ்தே
சொல்லும் பொருளே நமஸ்தே ருக்மணி ரூபி நமஸ்தே.

## தாய்

1) பிள்ளைகளின் மனமும் குணமும் பெற்ற தாய்க்குத்தான் தெரியும். எனவேதான் உலகத்தில் உள்ளவற்றில் தாயின் அன்பிற்குச் சமமாக எதுவும் இல்லை.

2) என் உயிர் போகட்டும் என் பிள்ளைகளைக் காப்பாற்று என்று பிள்ளையின் மீதுள்ள பாசத்தை வெளிக்காட்டும்போது அவள் உயர்த்தப்படுகின்றாள். தாயின் வாழ்த்து வெந்தணலில் வேகாது, அழியாது. எனவே எவரோடும் ஒப்பிடமுடியாது, அவள் ஒப்பற்றவள்.

3) ஆண்டவனால் எல்லா இடத்திலும் இருக்கமுடிவதில்லை. ஆனால் அன்னை எத்துன்பத்திலும் இன்பத்திலும் கூடவே இருப்பாய். தாயின் இதயம் வாடாத மலர்.

- **தங்கராசா நிரஞ்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன்

சிங்கார வேலனுக்குப் பாட்டுக்காவடி
திருப்பழனி முருகனுக்கு ஆட்டக்காவடி
சங்கார வேலனுக்கு தூக்குக்காவடி
சல்லாப முருகனுக்கு சோதிக்காவடி

வள்ளி தெய்வ நாதனுக்கு வண்ணக்காவடி
மயிலேறும் முருகனுக்குத் தீர்த்தக்காவடி
கள்ளவேடக் கந்தனுக்குப் பாலின் காவடி
கார்த்திகேயக் குமரனுக்குப் பழத்தின் காவடி

ஏரகத்து நாதனுக்குக் கரகக்காவடி
இனிய பரங் குன்றனுக்கு இரதக்காவடி
வீரசெந்தில் ராஜனுக்கு இரதக்காவடி
மிளிர் சோலை யழகனுக்கு விருதுக்காவடி

கதிர்காம வேலனுக்கு கற்பூரக்காவடி
கழுகுமலை யானுக்கு அலங்காரக் காவடி
மதுதணிகை முருகனுக்குச் சந்தனக்காவடி
முன்வயலூர் அதிபனுக்கு குங்குமக்காவடி

வேங்கடத்து வேலனுக்குப் பன்னீர்க்காவடி
விலாலிமலைச் சரவணற்குக் கரம்புக்காவடி
தாங்கு செல்வச் சந்நிதிக்கு அன்னக்காவடி
தமிழ் நல்லூர் கந்தனுக்குக் கும்பக்காவடி

மாவை புரத்தானுக்கு மாவிளக்குக் காவடி
மண்டூரில் கந்தனுக்கு இழுவைக்காவடி
பூநுணசை முருகனுக்குப் பறவைக்காவடி
பொலிகண்டிக் குருண்டு வரம் குழந்தைக் காவடி

கந்தா எனக்கொரு கதை சொல்லு கவலை நீக்கிடும் வழி சொல்லு
செந்தா மரையாள் மருமகனே சிவபூரணி தரு குருகுகனே *(கந்தா)*

சரவண பவனெனப்பாடி வந்தேன் தாளிணை மலரைத் தேடிவந்தேன்
மருமலர்மாலை சூடவந்தேன் வருமடியரொடு கூடவந்தேன் *(கந்தா)*

தேனார் கடம்பலர் அணிதோளா சிற்பர நர்த்தன திருத்தாளா
வானோர் போற்றும் அருளாள வள்ளிகுஞ்சரி மணவாளா *(கந்தா)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரனுக் கருளிய புண்ணியனே கிழவிக்குக் கனிதந்த க்ணணியனே
சூரனை மாய்த்த சுடர்வேலா தோகையிலாடும் குணசீலா *(கந்தா)*
பழமாய் மலையில் நின்றவனே பழந்தேன் செந்திணை தின்றவனே
பழம்பொருளே மறைப் புதுப்பொரளே பழவினை தீர்த்தெமை யாண்டருளே
*(கந்தா)*

## பச்சை மயில் வாகனனே

பச்சை மயில் வாகனனே சிவ பாலசுப்பிரமணியனே வா முருகா
இச்சையெல்லாம் உன்மேல் வைத்தேன் இனி எள்ளளவும் பயமில்லையே
*(பச்சை)*

கொச்சை மொழியானாலும் – உன்னை
கொஞ்சிக் கொஞ்சி பாடிடுவேன் – முருகா
மெல்ல மெல்ல புகுந்துவிட்டாய் எந்தன்
கள்ள மெல்லாம் கரைந்த தப்பா *(பச்சை)*

நெஞ்சமதில் கோவிலமைத்து – இங்கு
நேர்மையெனும் தீபம் வைத்து முருகா
செஞ்சிலம்பு கொஞ்சிடவே – வா
சேவல் கொடி மயில் வீரா *(பச்சை)*

அலை கடல் ஓரத்திலே – என்
அன்பான ஷண்முகனே – முருகா
அலையா மனம் தந்தாய் – உந்தன்
இஷ்டம் எந்தன் கஷ்டம் தீரப்பா *(பச்சை)*

## ஆலயமெல்லாம்

ஆலயமெல்லாம் கூட்டிடுவோம்
அணியணி யாய்விளக் கேற்றிடுவோம்
கோலத் தோரணம் போட்டிடுவோம்
குளிர் நீர் எங்கனும் தெளித்திடுவோம்

தேடித் தேடிப் பூவெடுத்து
சிறந்த மாலை பலதொடுத்து
ஆடும் சிவனுக் கணிந்திடுவோம்
அரகர சிவனெனப் பணிந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்பழம் தேங்காய் முன்வைத்து
பஜனை பாடிக் கைகுவித்து
மழவிடை யோனைக் கும்பிடுவோம்
வலம் வந்து திருவடி நினைந்திடுவோம்

திருவெண் ணீறு தரித்திடுவோம்
தீர்த்தமும் வாங்கிக் குடித்திடுவோம்
மருமலர் சந்தனம் வாங்கிடுவோம்
வாழ்வினில் ஆனந்தம் ஓங்கிடுவோம்

## சூரியன்

சூரியனே சூரியனே சோதிதரும் சூரியனே
பாரினிலே வளம்பெருக பலனுதவும் சூரியனே
வேதியர்கள் பாட்டிசைக்க விண்ணில் வரும் சூரியனே
ஓதுகலை ஞானமெல்லாம் உதவுகின்ற சூரியனே.

மாரிவரப் பயிர்செழிக்க மன்னுயிர்கள் சுகம் பொழிய
சீருடைய தொழில்க ளெல்லாம் சிறக்கவைக்கும் சூரியனே
ஏழ்பரியில் ஏறிடுவாய் எவ்வுலகும் தோன்றிடுவாய்
வாழ்வு நலம் தந்திடுவாய் வணங்கிடுவோம் வந்திடுவோம்

தாமரையின் நாயகனே தத்துவனே உத்தமனே
ஓமயாக காரணனே உளத்திருப்பாய் கதிரவனே

## சூலமா நாயகன்

சூலமா நாயகன் வைரவப் பெருமான்
துட்டரை அழிப்பவன் வைரவப் பெருமான்
காலனின் காலனே வைரவப் பெருமான்
கருவினை ஒழிப்பவன் வைரவப் பெருமான்

காளித் தாயுடனே வைரவப் பெருமான்
களிநடம் புரிவான் வைரவப் பெருமான்
சூழுலக மெல்லாம் வைரவப் பெருமான்
துணை நின்றாள்வான் வைரவப் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வியின் நாயகன் வைரவப் பெருமான்
வேதத்து நாயகன் வைரவப் பெருமான்
கோள்களை விதிப்பவன் வைரவப் பெருமான்
குலவிடும் ஆகமன் வைரவப் பெருமான்

உடுக்கிசைப் பிரியனார் வைரவப் பெருமான்
ஒளிர்பர சுடையவன் வைரவப் பெருமான்
கடுத்திடு நடமிடும் வைரவப் பெருமான்
கபால மொன்றுடையவன் வைரவப் பெருமான்

பற்பல வடிவினன் வைரவப் பெருமான்
பக்தரைக் காப்பவன் வைரவப் பெருமான்
சொற்பதங் கடந்தவன் வைரவப் பெருமான்
சுதந்திரக் கடவுளே வைரவப் பெருமான்

நெய்வடை பாயாசம் பல்வகை அமுது
நினைத்துப் படைத்து நின்னடி தொழுது
ஐயனே எங்கணும் உன்குடி யிருப்பு
அடைக்கலம் உனக்கே காப்பதுன் பொறுப்பு

## கிருஷ்ண மந்திரம்

ஓம் ஓம் ஓம்..... ஓம்
அமர ஜீவிதம் ஸ்வாமி அமுத வாசகம்
பதித பாவனம் ஸ்வாமி பக்தசாதகம் ஓம்
முரளி மோஹனம் ஸ்வாமி அசுர மர்த்தனம்
கீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம் ஓம்....
நளின தைவதம் ஸ்வாமி மதனரூபகம்

நாக நர்த்தனம் ஸ்வாமி மானவஸ்தகம்
பஞ்ச சேவகம் ஸ்வாமி பாண்டிய சாயகம்
கீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம் ஓம்....
சந்திய பங்கஜம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம் ஓம்...
சந்திய பங்கஜயம் ஸ்வாமி அந்திய புஷ்பகம்
சர்வ ரக்ஷகம் ஸ்வாமி தர்ம தத்துவம்
நாக பந்தணம் ஸ்வாமி நாகல்லகம்
கீ போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம்
ஓம்..... ஓம்........... ஓம்....... ஓம்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரி பஜனை செய்வோம்

ஹரி பஜனம் ஹரி பஜனம் ஹரி பஜனம் ஒன்றே
கலியுகத்தில் ஔடதமாய் கருணை செய்யும் இன்றே
பக்த ரெல்லாம் பரவசமாய் பாடுகின்ற நாமம்
சித்த சுத்தி தந்தருளும் தெய்வமணி நாம்ம
உடல் முழுதும் இன்பரசம் ஊட்டுகின்ற நாமம்
இடையறாமல் என்னுள்ளத்தே இலங்குகின்ற நாமம்
கமலழகம் கருணை விழி காட்டுகின்ற நாமம்
எமபயத்தை நீக்கவல்ல எம்பெருமான் நாமம்
பாற்கடலில் பாம்பணைமேல் பள்ளிகொண்ட நாமம்
மாமுனிவர் காதலிலே வளர்ந்த ஹரி நாமம்
பூமகளின் திருவுள்ளத்தே பொங்கிவரும் நாமம்
நீலமேக வடிவழகை நித்தியமும் காண்போம்
நேரமெல்லாம் பாடியாடி நிர்ப்பயமாய் வாழ்வோம்
ஹரி பஜனம் ஹரி பஜனம் ஹரி பஜனம் செய்வோம் இடைவிடாமல்
எண்ணியெண்ணி இப்பொழுதே செய்வோம்.

## சங்கர நாராயண ஸ்தோத்திரம்

ஆபந் பாந்தவ நாராயணா அனாதரட்ஷக ஸதாசிவ
தீனபந்து நாராயணா தீனநாத ஸதாசிவ
கருணா ஸாகர நாராயணா க்ருபா ஸிந்தோ ஸதாசிவ
பக்த வக்சல நாராயண சரணாகத வத்ஸல ஸதாசிவ
அதமோத் தாரண நாராயணா பதித பாவன ஸதாசிவ
பக்த போஷக நாராயணா ப்ரபூ ப்ராணநாத் ஸதாசிவ
விபூவிச்வநாத் நாராயணா ப்ரபூ ப்ராணநாத் ஸதாசிவ
ஆதிதேவா நாராயணா ஜகத்குரு ஸதாசிவ
வைகுண்ட பதி நாராயணா கைலாசபதி ஸதாசிவ
ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா பம் பம் பம் பம் ஸதாசிவ
ஹரி ஹரி ஹரி ஹரி நாராயணா ஹர ஹர ஹர ஹர ஸதாசிவ
அச்சுதா கேசவா நாராயணா அகண்ட பரிபூரண ஸதாசிவ
பாஹிபாம் திராஹிமாம் நாராயணா பாஹிமாம் ரட்ஷமாம் ஸதாசிவ
ப்ரஸீத ப்ரஸீத நாராயணா ரகோத ப்ரகோதய ஸதாசிவ
வாரும் வாரும் நாராயணா தரிசனம் தாரும் தாரும் ஸதாசிவ
ஒளியைத் தாரும் நாராயணா ஞானம் அருளும் ஸதாசிவ
காரும் ரட்ஷியும் நாராயணா விடுதலை தாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதி வேதமும் புராணமும் சொல்லும் அபூர்வ குண நாமம்
சதா என் நாவில் நிலாவியே எனை விடாத ஹரி நாமம்
மாமுனி நாரதர் வீணையில் ஊறிய மங்கள மயநாமம்
நானறி யாதெனை ஆண்டருள் தந்தெனை விடாத ஹரி நாமம்
உத்தமன் இட்ட தலத்தினில் அக்கணம் உதித்த திருநாமம்
பக்தி இலாத எனக்கும் இசைந் தெனை விடாத ஹரி நாமம்
ஆதிமூல மெனும் மாமத யானையை அருள வந்த நாமம்
ஏது மிலாத என் இதய மிகுந்தெனை விடாத ஹரி நாமம்
சராசரங்களில் எல்லாம் நிறைந்துள்ள மஹா புனித நாமம்
கெடாத வாறருள் நடாவியே எனை விடாத ஹரி நாமம்
மகா ஜெபம் செய்யும் நிஜனு பூதியில் மனோ ரமண நாமம்
ஸ ரோஜ மோஹன சொரூபமாய் எனை விடாத ஹரி நாமம்
அது நாராயண நாமம்

உன்பாதம் சரணடைந்தேன் கண்ணபெருமானே
உய்யவகை நீயருள்வாய் கண்ணபெருமானே
என்னாளும் உனைப்பணிந்தேன் கண்ணபெருமானே
ஏற்றவரம் நீயருள்வாய் கண்ணபெருமானே *(உன்பாதம்)*

மண்ணையுண்டு உலகாண்ட கண்ணபெருமானே
வானவர்க்கு மேலவனே கண்ணபெருமானே
மன்பதைக்கு உன்னையல்லால் கண்ணபெருமானே
வாய்த்த ஒரு தெய்வமுண்டோ கண்ணபெருமானே *(உன்பாதம்)*

வேதமுத லானவனே கண்ணபெருமானே
விண்ணளந்த மாதவனே கண்ணபெருமானே
யாதவ குலத்தில் வந்த கண்ணபெருமானே
அம்பிகையின் சோதரனே கண்ணபெருமானே *(உன்பாதம்)*

உன்னிசையைப் பாடலிலே கண்ணபெருமானே
துன்பமெல்லாம் தீருதையா கண்ணபெருமானே(உந்தன்)
பண்ணிசையைக் கேட்கையிலே கண்ணபெருமானே
பட்டமரம் தழைக்குமையா கண்ணபெருமானே *(உன்பாதம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இராகம் :* அமிர்தவர்ஷினி *தாளம் :* ஆதி

**பல்லவி**

கண்ணன் எங்கள் குலதெய்வம் – அவன்
கருணையினாலே நாம் உய்வோம்
திண்ணம் அவன்புகழ் பாடுங்கள் – குறை
தீராவிட்டால் கேளுங்கள் மலர்க் கண்ணிகள் *(கண்ணன்)*

(ஒரு) பெண்ணின் கூந்தல் காரணமாய்
பெரும் போர் விளைத்தே முடிவினிலே
மண்ணில் பாரம் தீர்த்திடவே பல
மாயை புரிந்திடும் மாயப் பெருமான் *(கண்ணன்)*

ஆலின் இலைமேல் பாலகனாய்
அகிலம் யாவும் வயிற்றடக்கி
வேலை துயின்று உயிர்காப்பான் பல
லீலை புரிந்திடும் பாலகோபாலன் *(கண்ணன்)*

சிறுவன் என்றெ ஏளனமாய்
சினந்த மாமன் கம்சனையும் – அவன்
உரங்கொள் மார்பு கலங்கிடவே தாவி
உதைத்தே வதைத்த உலக நாயகன் *(கண்ணன்)*

ஏழுமலை காஞ்சி ஸ்ரீரங்கம் முதல்
எண்ணில் பதிகளில் அவன் இருப்பான்
ஈழமதில் வல்லிபுரத்தில் வண்ணைப்பதியில்
எங்கள் பொன்னாலையில் இறைவனும் அவனே *(கண்ணன்)*

*இராகம் :* துர்க்கா *தாளம் :* ஏகம்திஸ்ரநடை

நாராயணா ஹரி நாராயணா – ஜெகந்
நாதா நமோ நமஸ்காரம் – திவ்ய
நாமங்கள் ஆயிரம் கொண்டவனே – அந்த
நாதத்துக்கே நமஸ்காரம் நாராயணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்ணிகள்

ஸ்ரீ ராமகோவிந்த சீதாமனோகர ஸ்ரீதரனே நமஸ்காரம் ஜெய
ஸ்ரீ ஹரிராஜகோபால ஜனார்த்தன தேவ நமோ நமஸ்காரம் *(நாராயணா)*

கங்கையைப் பாதங்களில் பயந்தாய் நாபிக்கமலத்திலே அயனைப் படைத்தாய்
ரங்கத்திரு நகர்ப்பள்ளிகொள்ளும் ஸ்ரீரங்கநாதா நமஸ்காரம் *(நாராயணா)*

ஓங்கி உயர்ந்து புகழ் பரப்பும் திருவேங்கடமாலை மீதினிலே நல்ல
பாங்காய் அலர்மகளோடிருக்கும் திருவேங்கடவா நமஸ்காரம் *(நாராயணா)*

மலைத்திருத்தல சயனத்திலும் காஞ்சிமாநகர் மீதிலும் எழில்மேவும் அந்தத்
தில்லைத் திருச்சித்ர கூடத்திருத்திடும் தேவா நமோ நமஸ்காரம் *(நாராயணா)*

அல்லிக்கேணி பார்த்த சாரதியாய் திருஅனந்தபுரம் பத்மநாபனுமாய்–ஸ்ரீ
வில்லிபுத்தூர் வடபத்ர சாயிஎன்றும் விளங்கிடுவாய் நமஸ்காரம் *(நாராயணா)*

ஆழ்வாரென்றே வல்லிபுரத்தினிலும் நல்ல அருளாளனாய் வண்ணைப்
பதியினிலும் – பொன்னின்
ஆமையதாகப் பொன்னாலையிலும் வந்து அமர்ந்தவனே நமஸ்காரம்
*(நாராயணா)*

*வானமெட்டு (மோகினி)* *தாளம் :* **ஆதி**

பச்சை வண்ணமேனியனே – எங்கள்
பாகல கிருஷ்ண நாயகனே
அச்சுத ஸ்ரீ கோவிந்தனே – எம்மை
ஆண்டருள் வேண்டுமையா *(பச்சைவண்ண மேனியனே)*

### சரணங்கள்

பாற்கடலில் துயில்பவனே – நாபியிலே பாரெல்லாம் படைத்தவனே
ஆற்றாது உன்னையடைந்தோம் எமக்கு அருள்புரியவேணுமையா
*(பச்சைவண்ண மேனியனே)*

யாதவகுலத்தில் பிறந்து – இந்தப் பூதலததின் சுமைதீர
மாதவனே நீபுரிந்த லீலைகள் கூறுவது எளிதில்லையே
*(பச்சைவண்ண மேனியனே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றெறிந்து குன்றெடுத்து – உனது காலாலே சகடுதைத்து
மன்றினிடை மல்லடர்ந்து – கொடிய மாவினை வாய்பிறந்தாயே
(பச்சைவண்ண மேனியனே)

வெண்ணெய் தயிர்பால் திருடி – கோகுலத்து வீதிகளில் நடமாடி
மண்ணையுண்டு உரலோடு இரண்டு – மருதினிடை போனவனெ
(பச்சைவண்ண மேனியனே)

புல்லாங்குழலை இசைத்து கன்னியரை – புத்திநடுமாற வைத்து
நல்லாரைக் காத்திடவே –நீபுரிந்த – நாடகங்கள் எத்தனையோ
(பச்சைவண்ண மேனியனே)

பாரதப்போர் முடித்தாயே – அரசு பாண்டவர்க்குக் கொடுத்தாயே
ஆரணமாய் கீதையினை – இந்த – பாரினுக்கு ஈந்தாயே
(பச்சைவண்ண மேனியனே)

நச்சரவின் மீதினிலே – ஏறி – நடமாடும் பாலகனே
அச்சமின்றி நாம்வாழ – எங்களுக்கு – அருள்புரிய வேணுமையா
(பச்சைவண்ண மேனியனே)

பொன்னாலை வல்லிபுரத்தில் – இருந்து – புதுமைபல புரிந்தவனே
என்னாளும் உன்னைப்பாட எமக்கு ஏற்றவரம் தாருமையா
(பச்சைவண்ண மேனியனே)

1. நாராயண என்று பாடுவோமே – அந்த
நாத இசை ஓசையிலே ஆடுவோமே
சீரான கோகுலத்தில் கூடுவோமே – எங்கள்
தேவகியின் பாலகனைத் தேடுவோமே (நாராயண)

2. தாவு சிறைக் கூடத்திலே வந்து பிறந்தான் – தவத்
தாயாம் யசோதை மடிமீது வளர்ந்தான்
ஆவணியின் ரோகினி நாள் அட்டமித்திதி – அந்த
ஆண்டவன் அவதரித்த கிருஷ்ண ஜெயந்தி (நாராயண)

3. மாடு மேய்க்கும் இடையருன் கூடிவருவான் – ஆயர்
தேடிவைத்த வெண்ணெய் தயிர் திருடித் தருவான்
ஓடுகின்ற நதிகளிலே பாய்ந்து நீந்துவான் – பெருங்
காடுகளில் விழும் பழங்கள் கையில் ஏந்துவான் (நாராயண)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சிறுவர்களைப் புல்லாங்குழல் ஊதியழைப்பான் – நல்ல
தெய்வக்கதை சொல்லிச் சொல்லி மெல்லச் சிரிப்பான்
அறிவு வளர் பாட்டுப்பாடி தாளம் போடுவான் – தில்லை
அம்பலத்து நாதனைப்போல் கூத்துமாடுவான் *(நாராயண)*

5. மாயமிட்ட பேச்சிமுலைப் பாலைக்குடித்தான் – கொல்ல
வருமசுரர் குலம் முழுதும் தேடிமுடித்தான்
தீய கம்சன் தலைபிடித்து மண்ணில் மடித்தான் – கோடி
தேவர் சூழ் துவாரகையின் ஆட்சிபிடித்தான் *(நாராயண)*

6. ஹரேராம ஹரேகிருஷ்ண என்ற போதிலே – நீல
அலங்காரனாய் வருவான் கருடன் மீதிலே
சராசரங்கள் தாங்குகின்ற கண்ணன் பாதமே – பாடி
சரணடைந்து வாழ்பவர்க் கில்லை ஏதுமே. *(நாராயண)*

கீதை சொன்ன கண்ணன் வண்ணத் தேரில் வருகிறான்
கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்
வள்ளல் வருகிறான் அன்பு வள்ளல் வருகிறான் *(கீதை சொன்ன)*

நீலமேனிக் கோலம்காண கால்கள் மறுக்குமா – அவன்
நிமிர்ந்த தோளும் விரிந்த மார்பும் நெஞ்சில் மறக்குமா
வீரம் வடிவும் மீசை அழகும் வெற்றி ரகசியம் – அவன்
பாரதப்போர் நடத்தி வைத்த யுக்தி அதிசயம் அது முத்தி ரகசியம்
*(கீதை சொன்ன)*

திருவல்லிக் கேணிக் குளத்தின் அருகில் வள்ளல் சிரிக்கிறான்
அன்பு கொண்டு வருபவர்க்கு ஒன்று உரைக்கிறான்
சொல்லும் மந்திரம் எட்டெழுத்தில் சொர்க்கம் தோன்றுதே
சொல்ல சொல்ல ஐயன் தோற்றம் வானில் நீண்டதே *(கீதை சொன்ன)*

பார்த்தனுக்குப் பாடம் சொன்ன கீர்த்தன் வருகிறான்
பசித்தவர்க்கு விருந்தளிக்க அமுது கொணர்கிறான்
காப்பதற்கு கையில் ஏந்தும் சங்கு சக்கரம் – அவன்
கழல்களுக்கு விளக்கம் தானே பிரம்ம சாஸ்திரம் *(கீதை சொன்ன)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கோவிந்தா கோவிந்தா கோவிந்தா போற்றி
கோவிந்தா கோவிந்தா கோவிந்தா போற்றி

2. ஏழுமலை மீதில் வளர் ஏந்தலே போற்றி
எண்ணியவை முடித்து வைக்கும் அண்ணலே போற்றி
அலைகடல் மீதிலே அமர்ந்தவா போற்றி
ஆழியுடன் சங்கு சங்கரம் தரித்தவா போற்றி *(கோவிந்தா)*

3. நிலமகளும் திருமகளும் நின்பாதம் வருட
நீடு துயில் காண்கின்ற நின்மலா போற்றி
நாளும் உன்னைத் துதிக்கின்ற நல்லவர் தமக்கு
நலம் யாவும் தருகின்ற நாயகா போற்றி *(கோவிந்தா)*

## கண்ணன் தாலாட்டு

ஜெய ஜெய கிருஷ்ணாவா – எங்கள் கோபியர் கண்ணா வா
உன்னடி பணிந்தோம் வா – உனக்கு உறைவிடம் அமைத்தோம் வா
கண்ணா ஓடிவா இடைக்கண்ணால் என்னைப்பார்
நாத ஒலியானவன் எங்கள் நம்பிக்கை பொருளானவன் – அவன்
ஆதி முதலானவன் எம்மை ஆளும் கருணாகரன் *(ஜெய ஜெய)*

கண்ணனை சிலையாய் செதுக்கி – எங்கள்
மனதினில் திருக்கோவில் அமைத்து
வெள்ளியால் முடிகள் தரித்து – உனக்கு
வேண்டும் அபிஷேகம் செய்வோம் *(ஜெய ஜெய)*

மலரால் மாலைதொடுத்து – உன்னை மங்கள விளக்கால் துதித்து
பொன்னால் தொட்டில் அமைத்து – உன்னை போட்டு தாலாட்டு பாடுவோம்
கண்ணா ஆரிரோ ஜெயகிருஷ்ணா ஆரிரோ
கிருஷ்ணா ஆரிரோ ஜெயகண்ணா ஆரிரோ

## ஸ்ரீ சக்கரம்

1. வைரமுடி கிரீடம் நடுவே ஸ்ரீ சக்கரம் – நல்
வாழ்வு தரும் பெருமால் கையில் சங்கு சக்கரம்
கார்மேக வண்ணன் கழுத்தில் நாகாபரணம்
மார்பினிலே நூற்றி எட்டு திருமகளாம் *(வைரமுடி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மகர கண்டி மேரு பச்சை சாளக்கிராமம்
மாலையில் வெங்கடேசனின் ஹரஸ்ரநாமம்
அலைமேலு மங்கை தாயார் அய்யன் வலப்புறம்
ஆதிலஷ்மி அகலாதிருப்பாள் மாயன் ஹிருதயம் *(வைரமுடி)*

3. தசாவதார சக்தியோடு ஓர் கூரிய சக்தி
தஞ்ச மென்று சரணடைந்தால் தாங்கும் கைகள்
பால் வழியும் முகத்தைக் கண்டார் பசி மறந்தார்
பாலாஜி என்றே பாதம் பற்றிக் கொண்டார் *(வைரமுடி)*

4. வைகரையில் பள்ளி எழுப்பி சுப்பிரபாதம்
கோபன் ஸ்ரீனிவாசனுடைய விஸ்வரூபம்
கோமாலை பூலங்கி சேவை அலங்காரம்
ராக்காலம் அழகுக் கோலம் ஏகாந்தம் *(வைரமுடி)*

## இராமர்

அன்பின் வழியில் யார் நடந்தாலும் அவனும்ராமனும் ஒன்று
அழுதவன் கண்களை யார்துடைத்தாலும் அவனும் ராமனும் ஒன்று
*(அன்பின் வழியில்)*

பெற்றவர் உள்ளம் பெருமிதம் கொள்ளும் பிள்ளையும் இராமனும் ஒன்று
மற்றவர்க்கெல்லாம் நல்வழிசொல்லும் மனிதனும் இராமனும் ஒன்று
*(அன்பின் வழியில்)*

ஒருமணம் புரிந்து நிறைவுடன் வாழும் ஒருவனும் இராமனும் ஒன்று
அருள்நெறி கருணை அமைந்தவன் எவனோ அவனும் இராமனும் ஒன்று
*(அன்பின் வழியில்)*

தர்மத்தைக் காத்திட உயிரையும் வழங்கும் தலைவனும் இராமனும் ஒன்று
தன்னலம் துறந்து மன்னுயிர் காக்கும் தலைவனும் இராமனும் ஒன்று
*(அன்பின் வழியில்)*

மண்வளம் பெருகிட மழைநீர் பொழியும் மேகமும் இராமனும் ஒன்று
பொன்னொளி திகழும் கதிரவன் என்னும் தீபமும் இராமனும் ஒன்று
*(அன்பின் வழியில்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பதி மலையில் கிடைப்பது என்ன?

திருப்பதி மலையில் கிடைப்பது எல்லாம் திருமால் திருவருளே –செல்வ
திருமால் தரும் பொருளே *(திருப்பதி மலையில்)*

திருப்புகும் அன்னை யசோதையும் கண்ணனும் மறுமுறை தோன்றி
உறவு கொண்டாடிய திருப்பதிமலையில் கிடைப்பது எல்லாம்
திருமால் திருவருளே செல்வதிருமால் தரும் பொருளே – அந்த
கிரேதாயுகத்தில் நரசிம்மன் திரேதாயுகத்தில் ரகுராமன்
துவாபரயுகத்தில் கண்ணபிரான் கலியுகத்தில் அவர் பாலாஜி – அந்த
*(திருப்பதி மலையில்)*

ஆதி சேஷனை மலையாக
ஆலைமேல் மங்கை துணையாக
வேத நாயகன் மாதவனே
வேங்கட மாமலை சுடராக – அந்த *(திருப்பதி மலையில்)*

ஓம் நமோநாராயண ஓம் நமோ நாராயண
ஓம் நமோ நாராயண ஓம் நமோ நாராயண

பிறவிதோறும் வினைமிகுந்து பெருகுகின்ற இருவினை
அகல வைக்கும் அரணதீபம் ஓம் நமோ நாராயண *(ஓம் நமோ நாராயண)*

ஊறு துன்பம் உடல் வியாதி ஊர்விடாத வறுமையும்
அற வைக்கும் அருள் மருந்து ஓம் நமோ நாராயண *(ஓம் நமோ நாராயண)*

ஏக்கமாய் குழிக்குள்ளே இரண்டுருண்ட வேளையில்
தூக்கிடும் துணைக்கரங்கள் ஓம் நமோ நாராயண *(ஓம் நமோ நாராயண)*

ரோகமோஹ தாகமீறி சோர்வு விஞ்சும் வேளையில்
கருணையான புனித கங்கை ஓம் நமோ நாராயண *(ஓம் நமோ நாராயண)*

ஜனன மரண பயதரங்க சாகரம் கடத்தியே
உடனு வந்து காக்கும் ஓடம் ஓம் நமோ நாராயண *(ஓம் நமோ நாராயண)*

கடுகடுத்து முனைகொடுத்து காலசூலம் கீறுநாள்
உயிர் தடுத்த கவசமாகும் ஓம் நமோ நாராயண *(ஓம் நமோ நாராயண)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்
நாராயண ஓம் நமசிவாய எனும் சாரமான நல்லதாரக மந்திரம் *(ஸ்ரீராம்)*

சஞ்சலத்தைக் கெடுத்து சாந்தத்தைக் கொடுப்பது
அஞ்சலி அளித்து நல்அஞ்சமொளிப்பது *(ஸ்ரீராம்)*

நாரதர் வால்மீகி முனிவர் நவின்றது ஆரமுதாயன்பர்க்கானந்தமீன்றது
பக்தி வைராக்யமும் பரந்த சமரசமும் சுத்த சச்சிதானந்த சித்தியுமளிப்பது
*(ஸ்ரீராம்)*

ஆண்மையும் வீரமும் ஆற்றலும் வெற்றியும் மேன்மையும் தருவது
விரும்பினால் வருவது ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்
காமாதிக் கள்வரைக் கட்டுடழிப்பது நேர்மை நிஷ்டை
உள்ளோர் நெஞ்சிலே செழிப்பது *(ஸ்ரீராம்)*

## ஸ்ரீராமன் வீரச் செயல்கள்

*ராகம் :* இந்துஸ்தானி மெட்டு *தாளம் :* ஏகம்

### பல்லவி

ஸ்ரீராமச் சந்திரனே திரிலோக சுந்தரனே
சீதாமனோகரனே ராம் ராம் ராம் *(ஸ்ரீராமச் சந்திரனே)*

1. தேவர் துயர் தீர்க்கத் திருவுள்ளம் கொண்டு
தசரதன் திருமகனாய் அவதாரம் கொண்டு
நீபுரிந்த வீரச்செயல் பாடி உன்னைத் தொழுவேன்
திருவருள் புரிவாயே ராம், ராம், ராம் *(ஸ்ரீராமச் சந்திரனே)*

2. வல்லரக்கி உயிர்போக்கி வேள்வி காத்தாயே
கல்லாயிருந்த பெண்ணின் சாபம் தீர்த்தாயே
வில்லொடித்து மிதிலையிலே ஜானகியை மணந்த
வீராதி வீரனே ராம், ராம், ராம் *(ஸ்ரீராமச் சந்திரனே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மழுப்படை ராமனது அகங்காரம் நீக்கி
மாதவமும் சிலையும் உன் வசமாக்கி
மந்தரையின் சூழ்ச்சியினாலே நாடுநகர் இழந்து
மாவனம் சேர்ந்தனையே ராம், ராம், ராம் *(ஸ்ரீராமச் சந்திரனே)*

4. கானகத்தில் சூர்ப்பனகை காதுமூக்கு மரிந்து
கரதூஷ ணாதியுடன் மாரீசனைக் கொன்று
கபந்தன் விராதனையும் மாய்த்துக் கரிகொடுத்த
கார்மேக மேனி வண்ண ராம், ராம், ராம் *(ஸ்ரீராமச் சந்திரனே)*

5. மைதிலியின் பிரிவாலே மனம் வாடிக் கானில்
மாருதி சுக்ரீவனோடு நட்பெய்தி அவர்க்காய்
மராமரம் ஏழினையும் ஓரம்பால் தொளை செய்து
மாவீரம் புரிந்தனையே ராம், ராம், ராம் *(ஸ்ரீராமச் சந்திரனே)*

6. எவராலும் வெல்லமுடியா வாலியினைக் கொன்று
ஏழுகடலைக் குரங்குப்படை யோடு தாண்டி
இலங்கை நகர் புகுந்து இராவணன் குலமொழித்து
மாதாவை மீட்டனையே ராம், ராம், ராம் *(ஸ்ரீராமச் சந்திரனே)*

7. அயோத்தி நகரமதை மீண்டு மடைந்து
அரியாசனம் கொண்டு அன்பே வடிவாக
அகில மெல்லாம் தரும ராச்சியமே புரிந்த
ஆதி மூலப்பொருளே ராம், ராம், ராம் *(ஸ்ரீராமச் சந்திரனே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் தோத்திரங்கள்

## கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு – நாங்க
கார்த்திகை முதல்தேதி மாலை இட்டோம்
ஐய்யப்பா ஐய்யப்பா என்றே சொல்லி – நாங்க
ஆறுவாரம் தானே நோம்பிருந்தோம் *(கன்னி)*

எங்க குருசாமி துணைகொண்டு அவர் பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சுமந்துக்கிட்டு வந்தோமய்யா
ஆறுபடை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திரையாய் நடந்து வந்தோமய்யா *(கன்னி)*

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமரிவரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமய்யா
எருமேலிபேட்டை துள்ளி வாவரையே வேண்டிக்கிட்டு
பேரூர் தோட்டில் பொரிபோட்டு வந்தோமய்யா *(கன்னி)*

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதாமலை ஏறிக்கிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமய்யா
பம்பையிலே குளிச்சிப்புட்டு பாவங்களைத் தொலைச்சுப்புட்டு
சபரிமலை ஏறிக்கிட்டு வந்தோமய்யா *(கன்னி)*

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூர ஜோதிதனைக் கண்டோமய்யா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உன்மகிமை அறிந்தோமய்யா *(கன்ன)*

## மாமலை சபரியில் மணிகண்டன்

மாமலை சபரியிலே மணிகண்டன் சந்நிதானம்
மாபெரும் பக்தர்களும் வணங்கிடும் சந்நிதானம்
கோமகன் குடிகொண்டு குறைதீர்க்கும் சந்நிதானம்
பூமகன் மைந்தனின் புண்ணிய சந்நிதானம் *(மாமலை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டு படிமீது விளங்கிடும் சந்நிதானம்
விதியையும் மாற்றிவைக்கும் வீரனின் சந்நிதானம்
கவலைப் போக்கிடும் கணபதி சந்நிதானம்
அவனியைக் காத்திடும் ஐயப்பன் சந்நிதானம் *(மாமலை)*

நாகரின் சந்நிதானம் வாவரின் சந்நிதானம்
நாளெல்லாம் நமையென்றும் கட்டிக்காக்கும் சந்நிதானம்
மாளிகை புறத்தம்மனின் மனங்கவர் சந்நிதானம்
நாளெல்லாம் நம்பிக்கை ஒளிவீசும் சந்நிதானம். *(மாமலை)*

## சந்தனப்பூ வாசம்

சந்தனப்பூ வாசம் வீசுதையா அது சபரிக்கு அழைக்குது வாரோமையா
காடுமலை தாண்டியே – சாமி வந்தோம் பெரும்பாதையே

மாலையிட்டோம் எதுக்கு மணிகண்டா உனக்கு பக்திகொண்டு
நடந்து வந்தோம் – ஐயா பள்ளிக்கட்டு சுமந்து வாரோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா

திந்தகத்தோம் பாட்டு கேட்குதையா – அது சன்னதிக்கு அழைக்குது
வாரோமையா – காவி உடை தாங்கியே – சாமி
வந்தோம் உனைக் காணவே காத்திருந்தோம் எதுக்கு
யாத்திரையாம் அதுக்கு முந்தி முந்தி நடந்து வாரோம் ஐயா
முன்பனியில் நடந்து வாறோம்.

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா

குங்குமப்பூ வாசம் வீசுதையா – அது எரிமேலி அழைக்குது
வாறோமையா கோட்டைப் படியேறியே
வந்தோம் பேட்டை விளையாடியே
வானவில்லை வளைத்து எண்ணங்களைக் குழைத்து
அங்க மெல்லாம் பூசி வாரோம் – ஐயா
அஞ்சு மலை தேடி வாரோம்.

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூர வாசம் வீசுதையா அது சரங்குத்தி அழைக்குது வாரோமையா
வாளும் கதை ஏந்தியே வந்து நின்றோம் சரம் போடவே
கன்னிச்சாமி எமக்கு உங்கதுணை இருக்கு பொன்னுபடி
நடந்து வாரோம் ஐயா உந்தனடி நினைந்து வாரோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா

நெய்மணக்கும் வாசம் வீசுதையா – அது நீ அழைக்கும்
சேதியைக் கூறுதையா சாமி உனைக் காணவே
வந்த ஏழை முகம்பாருமே மகரந்த விளக்கு மணிகண்டா
உனக்கு அதைக் கண்டு மகிழ்ந்து நின்றோம்

சாமியே சரணம் சாமியே சரணம் சரணம் சரணம் ஐயப்பா

சந்தனப்பூ வாசம் வீசுதையா – அது
சரணத்தின் மகிமையைக் கூறுதையா

## அச்சன் கோவில் அரசே

அச்சன் கோவில் அரசே என் அச்சம் தீர்க்கவா
பச்சை மயில் ஏறும் பன்னிரு கையன் சோதரா
இச்சை கொண்டேன் உந்தன் முன்னே ஈஸ்வரன்
மைந்தா – பச்சை வண்ணம் பரந்தாமன் மகிழும் செல்வா

சுவாமி பொன் ஐயப்பா சரணம் பொன் ஐயப்பா
சபரிகிரி நாயகனே சரணம் ஐயப்பா *(சுவாமி)*

ஆரியங்காவில் வாழும் ஆண்டவனே வா
பார்வதியால் அகமகிழும் பாலகனே வா
எருமேல் வீற்றிருக்கும் இறைவனே நீ வா
தர்மஞான சாஸ்தாவே தயவுடனெ வா *(சுவாமி)*

மலைவீடும் சபரிமலை மன்னவனே வா
குறை தீர்க்கும் குளத்துப் புழை பாலகனே வா
மன்னவனே மணிகண்டனே மகிழ்வுடனே வா
வன்புலி மேல் காட்சி தரும் வள்ளலே நீ வா *(சுவாமி)*

தேவர்களும் உனைப்பணிய காந்த மலையிலே
நீ ஆவலுடன் காட்சி தந்தாய் ஜோதி உருவிலே
காவலனே கண்ணாரக் கண்டோமே ஜோதிமலை
நாவார உனை அழைத்தோம் சாமியே சரணம் ஐயப்பா *(சுவாமி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சனை மகனே

அஞ்சனை மகனே ஆஞ்சநேயா அருட்கடல் நாதா ஆஞ்சநேயா
சிந்தையில் நிறைந்தாய் ஆஞ்சநேயா சீர்தருவாயே ஆஞ்சநேயா
சித்திரை நிலவே ஆஞ்சநேயா முத்திரைப் பொன்னே ஆஞ்சநேயா
வீரத்தின் பொருளே அஞ்சநேயா வெற்றியின் இலக்கே ஆஞ்சநேயா

சுந்தரவடிவே ஆஞ்சநேயா சோதியன்கனியே ஆஞ்சநேயா
சந்தன மணமே ஆஞ்சநேயா சந்ததம் தொழுதேன் அஞ்சநேயா
மூச்சினில் நிறைந்தாய் ஆஞ்சநேயா பேச்சினில் நிறைந்தாய் அஞ்சநேயா
காற்றினில் கலந்தாய் ஆஞ்சநேயா பாட்டினில் மகிழ்ந்தாய் ஆஞ்சநேயா

லட்சுமன் உயிரே ஆஞ்சநேயா லட்சியம் ஜெயிப்பாய் ஆஞ்சநேயா
தொண்டுக்குத் துணிவாய் ஆஞ்சநேயா நட்பிற்கு இனியாய் ஆஞ்சநேயா
நெஞ்சினில் நிதமும் ஆஞ்சநேயா ராமனைச் சுமக்கும் ஆஞ்சநேயா
வஞ்சனை அறியாய் ஆஞ்சநேயா நெஞ்சினில் அமர்வாய் ஆஞ்சநேயா

கம்பனும் போற்றும் ஆஞ்சநேயா வால்மீகி பாடும் ஆஞ்சநேயா
சேதுவின் கரைமேல் ஆஞ்சநேயா தவமது புரியும் ஆஞ்சநேயா
ஐமுக வடிவே ஆஞ்சநேயா ஆழ்கடல் தாண்டும் ஆஞ்சநேயா
வேதங்கள் அறிவாய் ஆஞ்சநேயா ராகங்கள் தருவாய் ஆஞ்சநேயா

கற்பெனும் சுடரே ஆஞ்சநேயா கற்பூர உருவே ஆஞ்சநேயா
அற்புத உருவே ஆஞ்சநேயா பொற்பதம் தொழுதேன் ஆஞ்சநேயா
வெற்றிலை தொடுத்தால் ஆஞ்சநேயா வெற்றிகள் அருளும் ஆஞ்சநேயா
பக்தரின் கண்ணீர் ஆஞ்சநேயா என் நீர் துடைப்பாய் ஆஞ்சநேயா!

அஞ்சனை மகனே ஆஞ்சநேயா
அருட்கடல் நாதா ஆஞ்சநேயா

## வெத்தலயில மாலை

வெத்தலையில மாலகட்டுங்க மாலகட்டுங்களே – ஒங்க
வேதனைய சொல்லிச் சொல்லி மாலகட்டுங்களே
தொளசி இல கொழுந்தெடுத்து கோர்த்து கட்டுங்களே – ராம
தோத்திரத்த சொல்லி சொல்லி மாலகட்டுங்களே *(வெத்தலையில)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி பணம் கேட்பதில்லை மாருதி ராஜா – அவன்
கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா
ராம ஜெயம் சொன்னிங்கன்னா வந்து நிற்பானே – தினம்
ராம நாம சாமி பேர பாடி நிற்பானே *(வெத்தலையில)*

ஆசையெல்லாம் வேரறுத்த அற்புத சாமி – அவன்
ஓசை தரும் மணி இருக்கும் வால் கொண்ட சாமி
காத்தடிச்சா புயலடிச்சா கலங்கிடலாமா – அந்த
கட்டித்தங்க மனசிருக்க தவிப்பது ஏம்மா *(வெத்தலையில)*

பொட்டுவச்சி பொட்டுவச்சி பூச செஞ்சாலே – அவன்
எட்டுவச்சி வாசல் கதவ தட்டிடுவானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே – அவன்
மெல்ல வந்து தாளமிட்டு பேட்டிருப்பானே *(வெத்தலையில)*

கும்மி கொட்டி கும்மி கொட்டி கும்பி போடு – எங்க
கோமகனாம் மாருதிக்கு சரணங்கள் பாடு
நம்பி வந்து நம்பி நின்று நவ்லதக்க கேளு – மனம்
வெம்பி வெடிக்க தேவயில்ல நன்மை கையோடு *(வெத்தலையில)*

ராம ராம ராம ராம ராம ராம் – ஸ்ரீ
ராமராம ராமராம ராம ராம்

வில்லொடித்த ராமன் எங்கள் ராமனே – அந்த
ராமனுக்குத் தூதன் ஆஞ்ச நேயனே
சீதை உள்ளம் வென்ற எங்கள் ராமனே – அந்த
சீதை தன்னை மீட்டஆஞ்ச நேயனே *(ராம ராம)*

காடு சென்ற ராமன் எங்கள் ராமனே – அந்த
காடும் மேடும் தாண்டும் ஆஞ்ச நேயனே
தீக்குளிக்கச் சொன்ன எங்கள் ஆஞ்ச நேயனே
தீயைக்கூட ஆளும் ஆஞ்சநேயனே *(ராம ராம)*

நீலவண்ண ராமன் எங்கள் ராமனே – அந்த
நீலக்கடலை ஆளும் ஆஞ்சநேயனே
ஆளவந்த ராமன் எங்கள் ராமனே என்னை
ஆளுகின்ற தெய்வம் ஆஞ்சநேயனே *(ராம ராம)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவருக்கும் அண்ணன் எங்கள் ராமனே – பஞ்ச
பாண்டவர்க்குத் தோழன் ஆஞ்சநேயனே
வில்லெடுத்துப் போர் ஜெயித்த ராமனே – தியின்
வாலெடுத்து வென்ற ஆஞ்சநேயனே (ராம ராம)

## பத்துப்படி ஏறி வந்தேன்

பத்துப்படி ஏறிவந்தேன் ஆஞ்சநேயனே
வெற்றிதர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே
பக்தியுடன் பாடி வந்தேன் ஆஞ்சநேயனே
முக்திதர வேண்டுமய்யா ஆஞ்சநேயனே (பத்துப்படி)

கற்றதிந்த கையளவே ஆஞ்சநேயனே – உன்னால்
பெற்றதிந்த வாழ்க்கையப்பா ஆஞ்சநேயனே
முத்துமணி மாலையில்லை ஆஞ்சநேயனே
மொத்தத்தில் நான் ஏழையய்யா ஆஞ்சநேயனே
பஞ்சமுக தரிசனமே ஆஞ்சநேயனே – கண்ணால்
கண்டுமனம் குளிரவந்தேன் ஆஞ்சநேயனே (பத்துப்படி)

வஞ்சமற்ற மனம்படைத்தாய் ஆஞ்சநேயனே – அதில்
ஆசை விதை ஏன் விதைத்தாய் ஆஞ்சநேயனே
பொய்யுரைத்து வாழ்ந்தறியேன் ஆஞ்சநேயனே – என்
மெய்ப்பொருளும் உன் அருளே ஆஞ்சநேயனே
மூச்சிருக்கும் நாள்வரைக்கும் ஆஞ்சநேயனே – உன்
பேச் செனக்கு வேதமய்யா ஆஞ்சநேயனே (பத்துப்படி)

## ஜெயராம் ஜெயராம்

ஜெயராம் ஜெயராம் ஸ்ரீராமா
சீதா நாதா ஸ்ரீராமா
துயரம் நீக்கும் ஸ்ரீராமா
துணையடி தருவாய் ஸ்ரீராமா (ஸ்ரீராம்)

தசரதன் தந்திடுதிருமகனே ஜனக ராஜனின் மருமகனே
பசிய நீலமா மேனியனே பரவு மயோத்தி நாயகனே (ஸ்ரீராம்)

சிவதனு முறித்தாய் ரகுராமா சீதையை மணந்தாய் புகழ்ராமா
தவமணிப் பாதுகை தனைக்கொடுத்துத் தம்பி பரதனுக்கரசளித்தாய் (ஸ்ரீராம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரேழ் ஆண்டுதவம் போனாய் இருடிகள் போற்றும் மணியானாய்
வீரத்தம்பி இலக்குமணன் விலகாய்த்துணையாய்க் கொண்டாயே *(ஶ்ரீராம்)*

சீதையை மீட்டிட அணைகட்டி செழித்த வாரைக்கு வந்திரட்டி
போதுமி ராவணன் தலையறுத்தாய் முடிதந்து வீடனற்கரசளித்தாய் *(ஶ்ரீராம்)*

ஆஞ்சநேயரை அணைத்தவனே அறநெறி காத்திட ஜெனித்தவனே
தேன்மொழி ராமேஸ்வரங்கண்டு சிவனடி தொழுதாய் ஜெயங்கொண்டு
*(ஶ்ரீராம்)*

நாராயணன் நீ அபிராமா
நமக்கருள் புரிவாய் பரந்தாமா
சீரார் வைகுந்த நாயகனே
திருவருள் புரிவாய் மாயவனே

*(ஜெயராம் ஜெயராம் ஶ்ரீராமா)*

## காயத்ரீ ஸ்லோகங்கள்

**அம்பாள்**

கணாம் பிகாய வித்மஹே
மகாதபாய தீமஹே
தன்னோ கௌரி ப்ரசோதயாத்!

**சுப்ரமணியர்**

சடாணனாய வித்மஹே
சக்தி கஸ்தாய தீமஹி
தன்னோ கந்த ப்ரசோதயாத்!

**மகா விஷ்ணு**

நாராயணனாய வித்மஹே
வாசுதேவாய தீமஹி
தன்னோ விஸ்ணு ப்ரசோதயாத்!

**மகா லக்ஷ்மி**

மகா லக்ஷ்மீய வித்மஹே
விஸ்ணு பத்மீய தீமஹி
தன்னோ லக்ஷ்மீ ப்ரசோதயாத்!

**சரஸ்வதி**

வீணாவாதின்யேய வித்மஹே
புஸ்த்தக கஸ்த்தாய தீமஹி
தன்னோ வாணி ப்ரசோதயாத்!

**பைரவர்**

சுனவாகனாய வித்மஹே
சூலகஸ்த்தாய தீமஹி
தன்னோ படுக ப்ரசோதயாத்!

**அஞ்சநேயா**

ஆஞ்சனேயாய வித்மஹே
விஷ்ணு பக்தாய தீமஹி
தன்னோ அனுமந்த ப்ரசோதயாத்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசடி விநாயகர் வணக்கம்

திருவே என் தெய்வமே தேவர் கோதந்த குருவே
சித்திவிநாயக உருவே என் உள்ளத்தில் உறைகின்ற பொருளே
அருளே அம்பலத்திலாடும் பரம்பொருளின் ஓர் உருவே
எம் வினைதீர்க்க வந்த பிள்ளையே
யார்நீ எவர்நீ எப்பொருளுநீ எவ்வுயிரும்நீ பிள்ளையும்நீ
எம்மை ஆட்கொள்ளவந்த பிள்ளையாரும் நீரே

வேலவனுக்கு மூத்தோனே விநாயகப் பெருமானே
சித்தர்க்குச் சித்திவிநாயகனே பக்தர்க்குப் பரம்பொருளின் பிள்ளையாரே
முகத்திற்கு முக்கண்ணனாய் முத்தி தருபவனே
என்வித்தகத் தேவனே உன்னை நம்பித்தொழு வோர்க்கு
நம்பிக்கை தரும் தும்பிக்கையானே
யார்நீ எவர்நீ எப்பொருளும்நீ எவ்வுருவும்நீ பிள்ளையும் நீ
எம்மை ஆட்கொள்ளவந்த பிள்ளையாரும் நீரே

ஓங்கார விநாயகனே ஒப்பற்ற பேரொளியே
ஆங்காரமாய் வந்தோரை உன் ஓங்காரத்தில் அடக்கிடுவாய்
பொய்யைப் பொய்யாக்கி மெய்யை உருவாக்கும்
மெஞ்ஞான பண்டிதா சித்தி புத்தி விநாயகா
யாரும் அற்றவழி தும்பிக்கை கொடுத்தாய்நீ
யார்நீ எவர்நீ எப்பொருளும்நீ எவ்வுயிரும்நீ பிள்ளையும் நீ
எம்மை ஆட்கொள்ள வந்த பிள்ளையாரும் நீரே

## ஓம் நமோ நாராயணாய நம
## ஹரே கிருஷ்ண மஹா மந்திரம்

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னில் படிவங்கள் எப்படியோ
ஓதங்கொள் கடலன்றி ஒன்றிலொடு ஒன்றொவ்வாப்
பூதங்கள் தொறும் உறைந்தால் அவையுன்னைப் பொறுக்குமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தன்னை அறியாத கன்றில்லை : தன்கன்றை
ஆயும் அறியும் : உலகின்தாய் ஆகி ஐய!
நீயறிதி எப்பொருளும் அவை யுன்னை நிலையறியா
மயை இது என்கொலோ? வாராதே வரவல்லாய்!

தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாதுநின்ற சுடரே!
தொடக் கறுத்தோர் சுற்றமே!
பற்றிநீத்த அரியநெடுங் கருணைக்கு எல்லாம் நிலையமே!
வேதம் நெறிமுறையின் நேடி ஆய்ந்த உணர்வின் உணர்வே!
பகையால் அலைப்புண்டு அடியேம் அடிபோற்ற அந்நாள்
ஈந்த வர உதவ எய்திணையே எந்தாய்!
இரு நிலத்தவோ? நின் இணை படித்தா மரைதாம்!

மேவாதவர் இல்லை மேவினரும் இல்லை வெளியோடு
இருள் இல்லைமேல் கீழ் இல்லை மூவாமை இல்லை
மூத்தமையும் இல்லை முதல் இடையோ மீறில்லை
முன்னொடு பின் இல்லை! தேவா! இங்கு இதுவோநீ
சென்றநிலை என்றால் சிலையேந்தி வந்தெம்மைச்
சேவடிகள் நோவக்காவா தொழியிற் பழிபெரிதோ? அன்றேல்
கருங்கடலில் கண்வளர்வாய்! கைமாறும் உண்டோ

நாழி நவை நீர் உலகெலாம் ஆக
    நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலபலவும் நின்றளந்தால் ஒன்றும்
    உலவாப் பெருங்குணத்த உத்தமனே மேல்நாள்
தாழி தரையாகத் தண்தயிர் நீராகத்
    தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்தமுதம் எங்களுக்கே ஈந்தாய்
    அவுணர்கள்தாம் நின் அடிமை ஆகாமை உண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமந் நாராயண ஸ்துதி

பூரணமே பதினாறு கலைக்ள சேரும்
　　பொருந்தரக்கன் பன்னிருவர் புகழ்ந்துசேரும்
காரணமே கருமுகில்போல் மேனிசேரும்
　　கருணைகொள் அஷ்டாட்சரத்தான் கலந்துசேரும்
வாரணமே யிலக்குமி மாரெண்மர் சேரும்
　　மதிமுகம் போல் நின்றிலங்கும் மாயாநேயா
ஆரணமே ஸ்ரீராமா கெருடன் மீதில்
　　அன்புடனே ஏறிவந்திங் கருள் செய்வாயே!

## ஸ்ரீ நரசிம்மர் பாடல்

அற்றார் எனாபோது ஆனாயும் நீயே
　　அயனோது வேதம் அளித்தாயும்நீயே
சிற்றாயர் குலம் வாழ வந்தாயும் நீயே
　　சிவனார்தம் ஐயம் தவிர்த்தாயும் நீயே
பெற்றாயும்நீயே பிறந்தாயும் நீயே
　　பிறவாத பேராளன் ஆனாயும் நீயே
நற்றாயினும் சால நன்றாயும் நீயே
　　நரசிங்கரூப நமஸ்தே நமஸ்தே!

பச்சை மாமலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம் கொழுந்தே என்றும் இச்சுவை தவிர்
யான்போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கன் மா நகரளானே!

ஆவியே! அமுதே! என நினைந்துருகி
　　அவரவர் பணைமுலை துணையாய்
பாவியேன் உணரா எத்தனை பகலும்
　　பழுதுபோய் ஒழிந்தன நாட்கள்
தூவிசேர் அன்னம் துணையோடு புணரும்
　　சூழ்புனற் குடந்தையே தொழுது
　　நாவினால் உய்ய நான்கண்டு கொண்டேன்
　　நாராயணா என்னும் நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கனொடு மதிள் புடைசூழ அயோத்தியென்னும்
அணிநகரத்து உலகனைத்தும் விளங்கும் சோதி
செங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உய்யக்கொண்ட வீரன் தன்னை
செங்கணெடுங் கருமுகிலை இராமன் தன்னை
தில்லைநகர் திருச்சித்ர கூடந்தன்னுள்
எங்கள் தனிமுதல்வனை எம்பெருமான் தன்னை
என்று கொலோ கண்குளிரக் காணும் நாளே!

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜென்மமும் மரணமும் இன்றித்தீருமே
இம்மையே ராம என்ற இரண்டு எழுத்தினால்.

## திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னா னால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்பாடிச் செல்வச்சிறுமீர் காள்
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப்படிந் தேலோ ரெம்பாவாய்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்
தரிக்கிலானாகித் தாள்தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதரு தியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வரத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாரை வெல்லும் சீர்கோவிந்த! உந்தனைப்
பாடிப்பறை கொண்டு யாம்பெறும் சன்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந் தேலோரெம்பாவாய்.

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப்பறை கொண்ட வாற்றை அணிபுதுவைப்
பெங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்றின் புறுவரெம்பாவாய்.

## பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு.

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

நெய்யெடை நல்லதோர் சோறும் நியதமும் மத்தாணிச் சேவகமும்
கையடைக்காயும் கழுத்துக்கு பூணொடு காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து என்னை வெள்ளுயிராக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியைச் சார்ங்கமென்னும்
வில்லாண்டான் தன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோ நாராயணயவென்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே.

*ஶ்ரீ பெரியாழ்வார் திருவடிகளே சரணம்*

## திருப்புராணம்

நெடிய மாயவனே போற்றி நிலமகள் கொழுந போற்றி
அடியினா லுலக மெல்லாம் அளந்தது மல்லா லந்தப்
படியெலா முண்டுகாந்த பண்ணவா போற்றி
கொடிய காலிங்க நர்த்த குஞ்சித பாத போற்றி போற்றி

சரண மென்றடைந்த பேர்க்குன் சரணமே கொடுத்து நீங்கா
மரணமும் பிறப்பும்நீக்கி வண்டொரு திகரி நல்கி
அரணமாயு வைகுந்தத்தை யளித்து வெம்பகைய தான
முரணெலாங் கெடுக்கு மாழி முகுந்தனே போற்றி போற்றி!

பங்கயனாகி யெல்லாம் படைப்பவன் நீயே நீண்ட
வங்கவார் கடல்சூழ் வையம் வளர்பவன் நீயே எங்கும்
பொங்கிய உயிரையெல்லாம் புசிப்பவன் நீயே நர
சிங்கமாய்நின்ற தேவ தேவனே போற்றி போற்றி

நின் அருளாம் கதியன்றி மற்றொன்றில்லை
நெடுங்காலம் பிழைசெய்த நிலை கழிந்தேன்
உன்னருளுக் கினிதானநிலை யுகந்தேன்
உன்சரணே சரணன்று உறுதிபூண்டேன்
மின்னிருளாய் நின்றநிலை எனக்குத் தீர்ந்து
வானவர் தம் வாட்சிதர வரித்தேன் உன்னை
உன்னருளால் எனக்கினியோர் பரமேற்றாமல்
என்திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டாள் வாழி திருநாமம்

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர் நீதியாய்
நல்லபக்தர் வாழுமூர் நான்மறைக ளோதுமூர்
வில்லி புத்தூர் வேதக் கோனூர்
பாதங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும் – கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதூ உம் வம்பு.
திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயர ரங்கர்க்கே கண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாருந் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே!

*ஆண்டாள் திருவடிகளே சரணம்*

## வண்ணை வேங்கடேசன் வாழித்திருநாமம்

நீராழி வண்ணனடி நினைப்போர் வாழி
நிறை மொழியோர் பசுநிலைகள் நிதமும் வாழி
பேராழி மண்ணுலகில் பெருகி வாழி
பிறங்கு வண்ணை நகர்வாழி புலவர் வாழி
சீராழி சங்கு கதை சிலைவாழ் வாழி
சீரிய கற்புடமை அறம் சிறந்து வாழி
வாராழி சூழ் இலங்கை வடபால் வண்ணை
வாழ் வேங்கடேஸ்வர தாள் வாழி வாழி.

## ஸ்ரீ ரங்கநாதர் வாழித்திருநாமம்

திருவாழி திரிசங்கு ஆழிவாழி
சிறந்த கொண்டல் உருவாழி
யோகத் திருத்துயில் வாழி உலகத்தளந்த மருவாழி
மது மலர்த்தாள் வாழி வணங்கு மன்பர் பெருவாழ்வனைய
பெருமாள் அரங்க பெருஞ்செல்வமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்ச நேயர்

வாதாத் மயம் வானாத யூரமுக்யம்
ஸ்ரீ ராம தூதம் சிரேசே நமாமி

## ஆஞ்சநேயர் துதி

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கை கண்டு அயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன்எம்மை அளித்துக் காப்பான்

ஓம்பூர் புவஸ் வாஹாக்ஷ தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தீயோயோன ப்ரசோதயாத்.

ஓம் நமோ, ஹரிராம தூதா ஆஞ்சநேயா அதபல பராக்ரம சூரா
அண்டரண்ட பகிரண்ட சண்டப் பிரசண்ட உத்தண்ட கோலா கலா
அகோர சத்ரு சம்ஹார வரமருள் க்குபா தயாளா சிவசிவயோகா சனப்ரியா
வாயுகுமாரா சீதா லஷ்மிசுதா! சுதா! சாயப் பராக்ரம விஸ்வரூபா.

ஓம்சார ஆம்கார ரீம்கார சஞ்சீவராஜா சர்வமோட்ச சரணா
சஹஸ்ரநாம அலங்ருத பூஷணர், ப்ரும்ம வரப்பிரகாச நிகூலா
பிருண்டகால ருத்ரா பக்தி விஷ்வாச சுத்த சுசீகரா சுக்ருத குணசீலா

அமிர்த கலைஞான பரமாத்மா பாப விமோசனா
பம் பம் பம் ரரர ரிரிரி நமசிவாய ஹனுமந்தா மம வசீ வசீ ஸ்வாஹா.

ஓம் தாஸர தாய வித்மஹே சீதா வல்லபா தீமஹீ
தன்னோ ராமப் ப்ரசோத யாத்

ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே வாயு புத்ராய தீமஹி
தன்னோ அனுமந்தப் ப்ரசோதயாத்

ஜெய் ஜெய் ஜெய் ஹனுமான் – கோ ஜாயி
கிருபாக ரோ குரு தேவ கீநாயி.

## ஆஞ்சநேயர் தோத்திரம்

காக்கின்ற மாருதியைக் கருது கனியோடு வடைமாலை சாத்து
தீக்குன்றை வெண்ணையினால் சாத்து திருத்துளவம்

## வெற்றிலையும் சாத்து

பூக்குன்றம் அன்னவனுமே காப்பான் புகழ்கொண்ட அனுமனை நீ போற்று
தீய்க்கின்ற கடனதனை தீரு திருவளர அன்னதானம் போடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மையே நல்கும் ஆஞ்ச நேயனை வணங்கினாலே
துண்ணெனச் சனியின் பீடை தொடர்ந்திடா தொழியும் இன்னும்
கண்ணினை நோக்கினாலே கடியகோள் துன்பம் எல்லாம்
மின்னலைப் போலமாயும் மேன்மையும் சேரும் பாரேன்.

## ஆஞ்சநேய திருப்புகழ்

சீருடைய வாயுமகன் சீர்த்தமுக மொன்றே
சீறுநர சிம்ஹமென சேர்ந்தமுக மொன்றே
பேறுடைய வராகமெனப் பெற்றமுக மொன்றே
பெற்றியுடைஹயக் ரீவரானமுக மொன்றே
சீருடைய ஓர் கருட ரானமுக மொன்றே
செஞ்சொலுடைப் பஞ்சமுகனா மனுமனென்றே
பாருடையோர் போற்றுகிற மாருதியை இன்றே
பாடுமெனமே இனியும் பயமுமிலலை என்றே.

மாருதி யேநீதியுரு வதுவானான்
மாநிதிய மே யருளும் திருவானான்
மாருதமும் தானெனவே வருவானே
மார்கழியன் பேரருளன் அருள்வானே
தீரமுடைத் தோள்வலியன் சிரஞ்சீவி
தீர்த்தமென மூர்த்தமென உறைவானே
மார்பிலுறு மாதவனைப் பணிவோமே
மாருதியின் பேரருளைப் பெறுவோமே!

அனுமாரே ஆஞ்சநேயா அனுமந்தா
அனுதினமும் உனைத்துதிக்க அனுமதிதா
ராமபிரான் தூதுவரே அனுமந்தா
ராவணனை வென்றவீரா அனுமந்தா
இலங்கை நகரைத் தீயிலிட்டாய் அனுமந்தா
கலங்கும் சீதைக் காதரவே அனுமந்தா
அஞ்சனையாள் புத்திரனே அனுமந்தா
அஞ்சுமுகம் உருக்கொண்டாய் அனுமந்தா
அண்டினோரை ஆதரிப்பாய் அனுமந்தா
அஞ்சேல் என்றே உரைப்பாய் அனுமந்தா
அனுமாரே ஆஞ்சநேயா அனுமந்தா
அனுதினமும் உனைத்துதிக்க அனுமதிதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாராயணன் திருப்புகழ்

ஆழி நடுவினில் ஊழி முடிவினில் ஆலின் இலையினில் துயில்வோனே
ஆடும் அரவினில் ஏறி நடனமும் ஆடீர் சயனமும் அமர் வோனே
அழி சுடர்விட நாளும் துளசியும் ஆர்க்கும் சங்கமும் உடையோனே
ஆழி கடைத்திட பூமி உதித்திட ஆகம் அமர்த்திய நெடியோனே
ஆழி தலையுடன் தூணில் உதித்துநீ ஆங்கு மதலையைப் புரிந்தாயே
ஆயர் மகளீரின் சேலை திருவடியே ஆவியுடல் என அணைவோனே
ஆழி ஒருபுறம் ஆயின் றெழுந்திட ஆன்ற துணைப்பதி வருவோனே
ஆவல் உதித்திட தாரம் அடியாரை ஆளும் வல்லிபுரப் பெருமானே.

## மங்களம்

ஸ்ரீராமச் சந்திரனுக்கு ஜெய மங்களம்
நல்ல திவ்விய முகச் சந்திரனுக்கு சுபமங்களம்
மாராபி ராமனுக்கு மன்னு பரந்தாமனுக்கு
ஈராறு நாமனுக்கு ரவிகுல சோமனுக்கு *(ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு)*

கொண்டர் மணிவண்ணனுக்கு கண்ணனுக்கு மங்களம்
செகசலை குமாரனுக்கு வீரனுக்கு மங்களம்
புண்டரிகத் தாளனுக்குப் பூச்சக்ர தாளனுக்கு
தண்டுளவர் தோழனுக்கு ஜானகி மணாளனுக்கு *(ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு)*

கோவை மணி வாயனுக்கு மாயனுக்கு மங்களம்
கோதண்ட கையனுக்கு மெய்யனுக்கு மங்களம்
தாவுதள சீலனுக்கு சத்திய விலாசனுக்கு
தேவரனு கூலனுக்கு தசரதன் பாலனுக்கு *(ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு)*

பகிரண்ட நாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதன் அன்பனுக்கு வும்பனுக்கு மங்களம்
சகல வுல்லாசனுக்கு சரமந்த காசனுக்கு
அகல விலாசனுக்கு அயோத்திய வாசனுக்கு *(ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு)*

வல்லிபுர ஆழ்வாருக்கு மங்களம் ஜெயமங்களம்
வண்ணைநகர் வரதராஜப் பெருமாளுக்கு மங்களம்
கண்ணை ஒத்த கீதைதந்த கண்ணனுக்கு மங்களம்
பொன்னாலையின் வரதராஜப் பெருமாளுக்கு மங்களம்
மன்னனாக வந்த ஸ்ரீ ராமனுக்கு மங்களம்
வல்லிபுரத்துறையும் மாயவர்க்கு மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயவர்க்கருகிருக்கும் தேவியர்க்கு மங்களம்
சூடிக் கொடுத்தின்புற்ற சுந்தரிக்கும் மங்களம்
பாடிப் போற்றிப்பேறடைந்த ஆழ்வார்கட்கும் மங்களம்
நேயமுடன் சேவைசெய்யும் கருடனுக்கும் மங்களம்
தூயவனைக் காக்கும் கோவில் கொண்ட வேங்கடர்க்கு மங்களம்
விண்ணளாவும் கோவில் கொண்ட வேங்கடர்க்கு மங்களம்
மங்களம் ஜெய மங்களம் மாயவர்க்கு மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்

ஸ்ரீ சர்வத்ர கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா ஸ்ரீ கோவிந்தா
ஸ்ரீ காந்தஸ் பரனே ஜெய ஜெயராம் ஆண்டாள் தீருவடிகளே சரணம்
மணி பூண்டாள் திருவடிகளே சரணம் கோவிந்த நாம சங்கீர்த்தனம்
ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்

*ஸ்ரீராம ஜெயராம் ஜெய ஜெய ராம்*

*"ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்திக்கு ஜெய்"*

**மனிதன் மனிதனாக வாழ 18 விஷயங்கள்**

| | | |
|---|---|---|
| மிகவும் மதிக்கப்படவேண்டியவர்கள் | – | தாய், தந்தை |
| மிக மிக நல்லநாள் | – | இன்று |
| மிக மிகப் பெரிய வெகுமதி | – | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | – | பணிவு |
| மிகவும் வேண்டாதது | – | வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | – | நம்பிக்கை |
| மிகக்கொடிய நோய் | – | பேராசை |
| மிகவும் சுலபமானது | – | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | – | பொறாமை |
| நம்பக்கூடாதது | – | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | – | அதிக பேச்சு |
| செய்யக்கூடாதது | – | நம்பிக்கைத் துரோகம் |
| செய்யக்கூடியது | – | உதவி |
| விலக்க வேண்டியது | – | சோம்பேறித்தனம் |
| உயர்வுக்கு வழி | – | உழைப்பு |
| நழுவவிடக்கூடாதது | – | வாய்ப்பு |
| பிரியக்கூடாதது | – | நட்பு |
| மறக்கக்கூடாதது | – | நன்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



ANDRA DIGITAL PRINTERS T.P : 021 222 3929
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org